# சூர்யா கல்லூரியில் தேசிய கருத்தரங்கு

விக்கிரவாண்டி, மார்ச் 27-

விக்கிரவாண்டி சூர்யா கல்வி குழுமத்தில் இன்ஜினியரிங் கல்லூரியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் இன்ஜினியரிங் துறை சார்பில் முதல் தேசிய கருத்தரங்கம் நடந்தது.

அறக்கட்டளை சேர்மன் டாக்டர் கவுதம சிகாமணி தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் டாக்டர் அசோக் சிகாமணி முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் பேராசிரியர் ஜெயசங்கர் வரவேற்றார்.

மேல் மருவத்துார் ஆதி பராசக்தி இன்ஜினியரிங் கல்லூரி பேராசிரியர் டாக்டர் நாகராஜன் கலந்து கொண்டு பேசினார்.

தேசிய அளவில் 200 கல்லுாரிகளிலிருந்து கலந்து கொண்ட மாணவர்களின் ஆய்வு கட்டுரை பற்றிய போட்டி நடந்தது. அதில் 300க்கும் மேற்பட்ட ஆய்வு கட்டுரைகளை போட்டியில் சமர்பித்தனர்.

இதில் 163 கட்டுரைகள் தேர்வு செய்து பரிசுகளும், சான்றுகளும் வழங்கப்பட்டது.

முன்னதாக கருத்தரங்கு மலரை பேராசிரியர் டாக்டர் நாகராஜன் வெளியிட மலரை முதல்வர் ஜெய்சங்கர் பெற்றுக் கொண்டார்.

நடுவர்கள் பேராசிரியர்கள் பார்த்த சாரதி, பாலாஜி ஸ்ரீகாந்த், ஒருங்கிணைப்பாளர்கள் கார்த்திக், ஜெகன், சுபா கலந்து கொண்டனர். துறைத் தலைவர் பேராசிரியர் சுந்தரராஜன் நன்றி கூறினார்.




விக்கிரவாண்டி சூர்யா இன்ஜினியரிங் கல்லூரியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் குறித்து நடந்த தேசிய கருத்தரங்கில் விழா மலரை டாக்டர் நாகராஜன் வெளியிட முதல்வர் ஜெய்சங்கர் பெற்றுக் கொண்டார்.